# 5

*சபை:*

# இதன் நிலைநாட்டல் (2)

## யோவானிலிருந்து பரத்துக்கேறுதல் வரையில் இராஜ்யம்

1. ***சபையும் இராஜ்யமும் ஒரே நிறுவனமாய் உள்ளனவா (மத். 16:18, 19)? கர்த்தருடைய பந்தி எங்கு இருக்க வேண்டியதாயிருந்தது (லூக். 22:29, 30)? ஆனால் அது கொரிந்து நகரில் எங்கிருந்தது (1 கொரி. 11:18-22)?***
2. ***இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கித்தவர் யார் (மத். 3:1, 2)?***
3. ***கிறிஸ்து தம்முடைய பிரசங்கித்தலை எவ்விதம் தொடங்கினார் 4:17)?***
4. ***அப்போஸ்தலர்கள் தாங்கள் பெற்றிருந்த வரையரைக்குட்பட்ட கட்டளையின்படி எவ்வாறு பிரசங்கித்தார்கள் (மத். 10:7)?***
5. ***இராஜ்யத்தைக் குறித்து எழுபது பேரின் செய்தி என்னவாக இருந்தது (லூக். 10:9)?***
6. ***சீஷர்கள் எவ்விதம் ஜெபிக்கும்படி போதிக்கப்பட்டார்கள் (மத். 6:10)?***
7. ***கடைசி இராப்போஜனத்தில், இராஜ்யத்தைக் குறித்து இயேசு து என்ன (லூக். 22:18)?***
8. ***மரித்துக் கொண்டிருந்த கள்வனின் கடைசி வேண்டுகோள் என்னவாயிருந்தது (லூக். 23:42)?***
9. ***(இயேசு) பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்பு அதன் (இராஜ்யத்தின்) மீட்டுத் தருதலைக் குறித்துக் கேட்டது யார் (அப். 1:6)? ஆகவே, இந்தக் காலத்திற்கு முன்னதாக இராஜ்யம் நிலைநாட்டப்பட்டிருக்க முடியுமா?***

## தொகுப்புரை

| **இராஜ்ஜியம் பெந்தெகொஸ்தேக்கு முன்பு.** | | **பெந்தெகொஸ்தேக்குப் பின்பு** |
|---|---|---|
| *"சமீபமாயிருக்கிறது"* | பெந்தெகொஸ்தே | *இராஜ்யத்தின் பங்காளி, வெளி. 1:6* |
| *"நெருங்கி வந்திருக்கிறது"* | | *இராஜ்யத்திற்குள் உட்படுத்தப்பட்டிருத்தல் ா. 1:13, 14* |
| *"அருகில் வந்திருக்கிறது"* | | *இராஜ்யம் வழங்கப்பட்டது, அப். 2:30* |
| *"வரும்"* | | *பெலத்தோடு வந்தது, ப். 2:1-4* |
| *"எதிர்நோக்கினர்"* | | *3000 குடிமக்கள், அப். 2:38, 41* |
| *"கட்டுவேன்"* | | *எருசலேமில் கட்டப்பட்டது, அப். 2:47; 8:1; 11:22* |

## இயேசுவும் சபையும்

1. **அவருடைய "வாக்குத்தத்தம்" என்பதின் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள விஷயங்களை முதலில் வாசித்து ஒப்பிட்டு, பிறகு "நிறைவேற்றம்" என்பதின் கீழ் உள்ள வசனக்குறிப்புகளை வாசித்து ஒப்பிடவும்.**

| **அவருடைய வாக்குத்தத்தம் (மத். 16:16-19)** | | **நிறைவேற்றம் (அப். 2:14-41)** |
|---|---|---|
| *1. கட்டுவேன்* | பெந்தெகொஸ்தே | *1. கட்டப்பட்டது அளிக்கப்பட்டது, 2:30, 47* |
| *2. கல்லின் மேல் - சத்தியம்* | | *2. ஆண்டவரும் கிறிஸ்துவும், 2:36* |
| *3. பேதுருவுக்குத் திறவு கோல்கள்* | | *3. பேதுரு திறவுகோல்களைப் பயன்படுத்தினார், 2:36-41* |
| *4. பேதுரு கட்டினார்* | | *4. எல்லார் மீதும் கட்டுப் படுத்தும் நிபந்தனைகள், 2:36-41* |
| *5. பேதுரு அவிழ்த்தார்* | | *5. 3000 பேர் கட்டவிழ்க்கப்பட்டனர், 2:38, 41* |

2. **என்றால், சபை எப்பொழுது நிலைநாட்டப்பட்டது (அப். 2:1)?**

## இராஜ்யம் பெலத்தோடே வரவேண்டியதாயிருந்தது

1. **கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள "முன்னுரைத்தல்" பற்றிய னை வாசித்து, அது எவ்விதம் நிறைவேற்றப்பட்டது என்பதை அப். நட. புத்தகத்தின் வசனக் குறிப்பிலிருந்து காண்பிக்கவும்.**

| **முன்னுரைத்தல் (மாற்கு 9:1)** | | **நிறைவேற்றம் (அப். 2:1-4)** |
|---|---|---|
| *1. வல்லமை வர இருந்தது* | பெந்தெகொஸ்தே | *1. வல்லமை வந்தது, (அப். 2:1-4)* |
| *2. இராஜ்யம் பெலத்தோடே வர இருந்தது* | | *2. இராஜ்யம் அளிக்கப் பட்டது, 2:30* |
| *3. அதைக் காணச் சிலர் வாழ்ந்திருப்பார்கள்* | | *3. சிலர் வாழ்ந்திருந்தார்கள், 2:14* |
| *4. அதற்கு முன்பு சிலர் மரிப்பார்கள்* | | *4. யூதாஸ் மரித்திருந்தான், 1:16-18* |

2. **என்றால், சபை எப்பொழுது நிலைநாட்டப்பட்டது (அப். 2:1)?**

## சபை இருப்பதற்கான ஐந்து இன்றியமையாத விஷயங்கள்

1. **சுவிசேஷத்தின் மூன்று அடிப்படை உண்மைகள்: அவைகளைக்**

***குறிப்பிடவும் (1 கொரி. 15:3, 4). கிறிஸ்து உயிர்ப்பிக்கப்பட வில்லையென்றால், அதைத் தொடரும் ஏழு தீமைகளைக் குறிப்பிடவும் (1 கொரி. 15:13-19).***

2. ***நான்காவது இன்றியமையாத விஷயம்: யாருடைய நாமத்தில் பாவமன்னிப்பு உள்ளது (லூக். 24:47அ; அப். 2:38)?***
3. ***ஐந்தாவது இன்றியமையாத விஷயம்: பரிசுத்த ஆவியானவர் என்ன செய்வார் (யோவா. 14:26; 16:8, 13)?***
   - *அ. இந்த ஐந்து இன்றியமையாத விஷயங்களும் எங்கு தொடங்கும் (லூக். 24:46, 47)?*
   - *ஆ. இந்த விஷயங்களை அப்போஸ்தலர்கள் எப்பொழுது அறிவிக்க வேண்டியவர்களாயிருந்தனர் (லூக். 24:48, 49)?*
     - *(1.) கிறிஸ்து வாழ்ந்திருக்கையில் இந்த விஷயங்கள் அறிவிக்கப் படக் கூடாதிருந்தது ஏன்? வைகள் உண்மைகள் என்ற வகையில் நடந்திருந்த ல்லை;இவைகள் முதலில் உண்மைகளாக வேண்டி யிருந்தது. அத்துடன் கூட அவருடைய சீஷர்களில் எவரும் - அவர்களுக்கு அவர் காட்சியளிக்கும் வரையில் - அவர் மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்படுவார் என்று விசுவாசித்திருந்ததில்லை. பின்வரும் சான்றைக் வனிக்கவும்:*
     - *(2.) உயிர்த்தெழுதலின் செய்தியைச் சீஷர்கள் எவ்வாறு பற்றனர் (மாற். 16:11, 14)?*
     - *(3.) தோமா முதலில் அந்தச் செய்தியை எவ்வாறு ஏற்றுக் கொண்டார் (யோவா. 20:24, 25)? ஆகையால் சபை எப்பொழுது நிலைநாட்டப்பட்டது? முன்பு நடக்க வேண்டிய ஐந்து இன்றியமையாத விஷயங்களும் உண்மைகளான பொழுது - நிலை ஈட்டப்பட்ட உண்மைகளான பொழுது - அது நிலை நாட்டப்பட்டது.*
   - *இ. பேதுருவின் முதல் பிரசங்கத்தில் ஐந்து இன்றியமையாத விஷயங்களைக் கண்டறியவும் (அப். 2:4, 23, 24, 32, 33, 38). அப்படியானால் எந்த நாளில் சபை நிலைநாட்டப்பட்டது (அப். 2:1)?*